முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 566**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

17.04.2021, சனிக்கிழமை

1. வேதசக்தியே அரங்கா போற்றி
வினைவெல்ல வந்த தேசிகா போற்றி
பூதலத்தை தர்ம நெறிகொண்டு
புண்ணிய லோகமாக்கி ஆளவந்த ஞானியே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்மிகுந்த அரங்கன் தர்மமே
அகிலத்தை மாற்றி அமைக்கக்கூடும்
3. கூடாத துன்பங்கள் அனைத்துமே
குருராஜன் கொள்கை வளர பரவவே
தடையற உலகை விட்டகன்று
தரணியே அமைதியும் நல்ல பாதுகாப்பும் பெறும்
4. காப்பு தரும் மகா யோகி அரங்கன்
கருணைக்கொண்ட மாதவசி தேசிகர்
ஒப்புகொண்ட சுத்தசன்மார்க்க உயர் கொள்கை
உலகமெங்கும் பரவி நிற்க இனிதே
5. காப்பு கூடி உலகமக்களுக்கு
கலியுகத்தில் அழிவில்லாத பெருவாழ்வு காணக்கூடும்
கூடவே அரங்கனை தொடர்ந்து வரும்
குருமார்க்கம் வழி உயர் சீடர்களெல்லாம்
6. ஈடேறி இந்த கலியுகத்தில் ஞானியாகி
ஏழாம் படைவீடு என்கின்ற சக்திமூலம்
மூலமாக உலகோர் முழுமைஞானம் பெற்று
மொழிகுவேன் ஜீவ முக்தி நிலை காண்பர்
7. வழுவாது அரங்கன் நாமஜெபம் போற்றி
வடிவேலன் ஜோதி வழிபாடு செய்து கொண்டு
வணங்கி தொடர்ந்து உலகோர் வருகவருக
வையகம் ஞான யுகமாற்றம் பெறுவதோடு

8. பெருமைமிக்க நல்ல தலைமைகளும்
பேராசான் அரங்கன் உன் ஆசிபெற்றவர்கள்
பதவி நிலை கண்டும்
கலியுகம் ஞான ஆட்சிக்காலத்தை அடையும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.